**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை.**
**முன்னிலை: திரு.S. முகம்மது யூசுப் நவாஸ், B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை.**
**2025 ஆம் ஆண்டு ஜனவரி 07-ஆம் நாள் செவ்வாய்கிழமை**
**இடைக்கால மனு எண்.6/2024**
**இன்**
**அசல் வழக்கு எண்.14/2021**

1. K. கடம்பவனம்
2. K. ராஜேந்திரன் ..... மனுதாரர்கள்/வாதிகள்

..எதிர்..

1. தமிழக அரசு அதன்
   மாவட்ட ஆட்சியர் மூலமாக சிவகங்கை.
2. வட்டாட்சியர், மானாமதுரை.
3. துரை. ..... எதிர்மனுதார்/பிரதிவாதி

இம்மனு என்முன்பு 07.01.2025 இன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ஆதிமூலம் அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதார்கள் தரப்பில் கற்றறிந்த அரசுதரப்பு வழக்கறிஞர் திரு.M.துரைப்பாண்டி அவர்கள் ஆஜராகியும், 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.இளங்கோவன் அவர்கள் ஆஜராகியும் உள்ள நிலையில், இருதரப்பு வாதங்கள் கேட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

**1.** மனுச்சொத்தை ஆராய்ந்து வரைபடத்துடன் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ஒரு வழக்கறிஞர் ஆணையரை நியமனம் செய்ய உத்தரவிடக்கோரி மனுதாரர்/வாதி தரப்பில் சிபிசி கட்டளை 26 விதி 9ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனு.

**2. மனுவின் சுருக்கம்:**

தாவா சொத்தை பொறுத்து எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்து என்பது தமிழக அரசுக்கு பாத்தியமான புல எண்.223/4A புஞ்சை நிலத்தில் நடுவே உள்ள 10 செண்டு ஆகும். புல எண்.223/4A-ன் மொத்த விஸ்தீர்ணம் 1.11.0 ஹெக்டேர்ஸ் ஆகும். தாவா புல எண்.223/4A-க்கு தெற்கே மனுதார் தகப்பனார் கருப்பையாவிற்கு

பாத்தியமான நத்தம் புல எண்.337/26 உள்ளது. அதில் சுமார் 50 வருடங்களாக மனுதாரரின் தகப்பனார் ஓட்டுவீடு கட்டி அனுபவித்து வந்துள்ளார். மனுதார் தகப்பனார் காலமான பின்னர், மனுதாரரும், சகோதரரும் தாவா சொத்தான புல எண்.223/4A-ல் நடுப்புறம் 10 செண்டு இடத்தில் தாவா சொத்திற்கு உள்ள ஓட்டு வீட்டோடு சேர்ந்து கடந்த 2004ம் ஆண்டிலேயே ஒரு தார்சு வீடு கட்டியும் கிழக்கே ஒரு ஆழ்குழாய் கிணறு மோட்டார் அமைத்தும் இன்று வரை அனுபவம் செய்து வருகிறார் என்றும், இந்த வழக்கின் 3ம் பிரதிவாதியான மூக்கன் மகன் துரை என்பவர் தாவா சொத்து உள்ளிட்ட மொத்த சொத்தான புல எண்.223/4A மொத்த விஸ்தீர்ணம் 1.11.0 ஹெக்டேர்ஸ் முழுமைக்கும் அவரது பெயரில் ஒப்படைப்பு பெற்றிருப்பதாக 2003ம் ஆண்டு பிரஸ்தாபித்து வந்தார். மேற்படி ஒப்படைப்பினை ரத்து செய்திட சிவகங்கை மாவட்ட வருவாய் அலுவலரிடம் மனு செய்து அதுவும் ந.க.சி2/7339/2003 என்று எண்ணிடப்பட்டு விசாரணை நடைபெற்று மேற்படி ஒப்படைப்பு சட்டவிரோதமாக பெறப்பட்டது என்று கடந்த 14.07.2005ம் தேதி ஒப்படைப்பு ரத்து செய்யப்பட்டுள்ளது. எனவே தாவா சொத்தை சமூகம் நீதிமன்ற ஆணையர் நேரில் பார்வையிட்டு நில அளவை செய்து தாவாச் சொத்தின் உண்மைதன்மை, சொரூபநிலை, இயற்கை அமைப்பு மற்றும் ஆக்கிரமிப்புகளை ஆகியவைகளை நீதிமன்றத்திற்கு தெளிவுபடுத்தும் விதமாக வரைபத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்திட நீதிமன்ற ஆணையாளரை நியமனம் செய்ய வேண்டி மனுதாரரால் மனு தாக்கல்.

<u>3. 1, 2ம் எதிர்மனுதார்கள் தரப்பில் எதிர்மறுப்புரையின் சுருக்கம்:-</u>

தாவா சொத்துக்கு அருகில் உள்ள 337/26ல் பரப்பு 0.03.65 ஏர்ஸ் ரயத்துமனை பட்டா எண்.778 வைரகிழவன் மகன் கருப்பையா பெயரில் உள்ள மனையில் கருப்பையா மகன்களான வாதிகள் மேற்கு திசையில் ஒரு தார்சு வீடு கட்டியுள்ளார். மேற்படி வீட்டிற்கு முன்பு வடக்கு திசையில் புல எண்.223/4A பரப்பு 1.11.0 ஹெக்டேர் தாவா சொத்தான அரசு புஞ்சையில் பரப்பு 0.03.19 ஏர்ஸ் ஆக்கிரமிப்பு செய்து அவ்விடத்தில் பழைய செயல்படாத போர்வெல், புதிய போர்வெல் மின்மோட்டாருடன், ஆஸ்பெட்டாஸ் செட், செப்டிடேங், வேப்பமரம் மற்றும் மின்கம்பம் ஆகியவை மேற்படி இடத்தில் அமைக்கப்பட்டு ஆக்கிரமிப்பாக உள்ளது. 2ம் வாதியும் அவரது தகப்பனார் கருப்பையா பெயரில் உள்ள புல எண்.337/26ல் உட்பட்ட நிலத்தில் கிழக்கு பகுதியில் ஒரு பகுதியும் நத்தம் புல எண்.250க்கு உட்பட்ட புலத்தின் மீதப்பகுதியும் சேர்த்து ஒரு தார்சு வீடு கட்டியுள்ளார். அதே போல் 3ம் பிரதிவாதியான துரை என்பவர் தாவா புலத்தில் 0.00.5 ஏர்ஸ் உள்ள இடத்திற்கு ஒரு கொட்டகை அமைத்து ஆக்கிரமிப்பு

செய்துள்ளார். தாவா புலத்தில் வாதிகளும் 3ம் பிரதிவாதியும் கூட்டாக சேர்ந்து கொண்டு அரசுக்கு பாத்தியப்பட்ட அரசு புன்செய் நிலத்தில் ஆக்கிரமிப்பு ஏற்படுத்தி கொண்டு அரசுநிலத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட உள்நோக்கத்துடன் தாவா மனு தாக்கல் செய்துள்ளனர். தாவா சொத்தில் அனுபவத்திற்கான ஆவணத்தை உறுதிப்படுத்த தாவா மனு தாக்கல் செய்துள்ளனர். அரசுக்கு பாத்தியப்பட்ட புஞ்சை நிலத்தில் ஏற்படுத்தியுள்ள ஆக்கிரமிப்பு பகுதியை அனுபவம் செய்வதற்காக தாவா மனு தாக்கல் செய்திருப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று எதிர்மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

**<u>4. 3ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்மறுப்புரையின் சுருக்கம்:</u>**

வழக்கு சொத்து அரசுக்கு பாத்தியமாக இருந்ததில் வழக்கு சொத்தை 3ம் பிரதிவாதியும் அவரது தகப்பனாரும் அனுபவம் செய்து வந்ததில், வழக்கு சொத்தை சர்வே எண்.223/4A விஸ்தீரணம் 1.11.00 ஏர்ஸ் புஞ்சை நிலத்தை 3ம் பிரதிவாதி பெயருக்கு மானாமதுரை வட்டாட்சியர் அவர்களால் டி.ஏ.37/1 என்ற எண்ணில் ஒப்படைப்பு வழங்கப்பட்டது. அது முதல் 3ம் பிரதிவாதியே அனுபவம் செய்து வருகிறார். மனுதார்கள்/வாதிகள் கூறியுள்ள சர்வே எண்.223/4A நஞ்சை நிலம் அரசுக்கு பாத்தியமாக இருந்து அதை 3ம் பிரதிவாதிக்கு வண்டிப்பாதை மற்றும் வுசயளெகழசஅநச யை நீக்கி பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க உத்தரவு பிறப்பிக்க நிலையில் மனுதாரர் கோரும் 10 செண்ட் இடமும் தமிழக அரசுக்கு பாத்தியமாக இருந்தால் வருவாய் கோட்டாட்சியரிடம் முறையீடு செய்து மனுதாரர்கள் பெயரில் பட்டா ஏற்படுத்தி கொண்டு பிறகு தான் இடத்தை அளவு செய்ய மனுதாரர்களுக்கு உரிமையுள்ளது. சிவகங்கை மாவட்ட ஆட்சியரும், மானாமதுரை வட்டாட்சியரும் மனுதாரர்களின் கூற்றுப்படி 2, 3 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்த அளவு செய்ய மனுதாரர்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றும், தாவா மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

**5.** இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கவில்லை சான்றவாணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>6. இம்மனு அனுமதிக்கத்தக்கதா/இல்லையா என்பதேயாகும்:-</u>**

6.1. மனுதாரரின் அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை கோரும் வழக்காகும். தாவா சொத்தை மனுதார் அனுபவம் செய்து வருவதாக

கூறும் சங்கதிகளுக்கு ஆவணப்படுத்த மற்றும் நிரூபணம் செய்யவே கமிஷன் நடவடிக்கை வேண்டி தாவா மனு மனுதார் தாக்கல் செய்துள்ளார். ஒரு சொத்தில் ஒரு நபரின் அனுபவத்தை கமிஷன் நடவடிக்கையின் மூலம் நிரூபிக்க இயலாது என்றும், பல உயர்நீதிமன்ற, உச்சநீதிமன்ற தீர்ப்புகள் உள்ளன.

6.2. வாதியின் அனுபவத்தை தாவா சொத்தில் சாட்சி மற்றும் சான்றாவணங்களின் மூலம் நிரூபிக்க வேண்டுமே தவிர வழக்கறிஞர் ஆணையரை நியமித்து சாட்சியம் செய்ய இயலாது என்று பல முன்தீர்ப்புகள் இருப்பதை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

மேற்கண்ட மேன்மை பொருந்திய உயர்நீதிமன்றத்தீர்ப்பை இந்நீதிமன்றம் இந்தமனுவை முடிவு செய்வதில் கவனத்தில் கொண்டது.

6.3. **THE HONOURABLE MR.JUSTICE N.ANAND VENKATESH**
**CRP PD (MD) .No.970 of 2012** and M.P.(MD)No.1 of 2012 of S.Anand –Vs –A.Jeyabalan –

10. This Court is aware of the fact that even in a suit for bare injunction, an Advocate Commissioner can be appointed. It is not a complete bar for a Court to appoint an Advocate Commissioner in a suit for bare injunction. However, such an appointment must be only in cases where it is necessary for localising the property, when there is a dispute regarding boundaries or there is an attempt made to alter the physical features of the property etc. In a suit for bare injunction, the Courts are normally reluctant to appoint a Commissioner for noting down the physical feature of the property, since in most of the cases, it will amount to collecting evidence in favour of one of the parties.

11. In the present case, it is the duty of the respondent, as plaintiffs, to establish their possession. If there are standing crops in the property, the same will be reflected in the adangal and other revenue records and there is no requirement for an Advocate Commissioner to visit the property and see if there are standing crops. Such an inspection will only to amount to finding out who is in possession of the property. Just because the petitioners have raised a plea that the property is a barren land, that does not in any way justify the Court below to appoint an Advocate Commissioner. That apart, the cloud on the title of the respondents over the property can never be resolved with the report of

an Advocate Commissioner. Looking at the order passed by the Court below in any manner, this Court does not find any justification in the Court below appointing an Advocate |Commissioner. – என்ற முன்தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முடிவாக மேற்கண்ட காரண காரியங்களின் அடிப்படையில் இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025ம் ஜனவரி 07-ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/-திரு.S.முகமது யூசுப் நவாஸ், 07.01.2025
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

மனுதார் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை
எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்- இல்லை

ஒம்/-திரு.S.முகமது யூசுப் நவாஸ், 07.01.2025
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

DISTRICT MUNSIF COURT
MANAMADURAI

ORDER

I.A.No. 6/2024
in
OS. No.14/2021

Dated:07.01.2025